செ.வெ.எண்.803 நாள். 10.12.07

# செய்தி வெளியீடு

## உள்ளாட்சிகளுக்கு அதிகார பரவலாக்கம் குறித்த மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரை அறிக்கைகள்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அளித்தார்

1996ம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உள்ளாட்சிகளுக்கான அதிகார பரவலாக்கம் குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய காந்தியவாதியும், மாநில திட்டக்குழு உறுப்பினருமான திரு எல்.சி. ஜெயின் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அதன் பின்னர் 1997–ம் ஆண்டு அப்போதைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் தலைமையில் மீண்டும் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பெருவாரியான பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டன.

தற்போது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று 11.8.2006 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டபடி, மாநில அளவிலான மூன்றாவது உயர்நிலைக் குழுவை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைத்து 22.1.2007 அன்று அரசு ஆணையிட்டது. இக்குழுவில் அரசு உயர் அதிகாரிகள், பல்வேறு கட்சிகளின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெற்றனர்.

இக்குழுவின் கூட்டம் 7.3.2007 மற்றும் 19.3.2007 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. கிராம ஊராட்சி மன்ற தலைவர்கள் தவிர்த்து இதர உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்போடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் உள்ளாட்சித் தலைவர்கள் கருத்தரங்கம் 18.3.2007 அன்று சென்னையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அதிகாரப் பரவலாக்கம் குறித்து தமிழ்நாட்டிலுள்ள 12618 கிராம ஊராட்சித் தலைவர்களின் கருத்துகளையும் அறிந்திட ஈரோடு, திருவண்ணாமலை, திருச்சி, விருதுநகர் ஆகிய நகரங்களில் கிராம ஊராட்சித் தலைவர்களின் மண்டல கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

உயர்நிலைக் குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் மற்றும் அரசுத் துறைச் செயலர்கள், துறைத் தலைவர்கள் உடனான ஆலோசனைக் கூட்டங்கள்,

வல்லுநர்களின் பரிந்துரைகள் மற்றும் உள்ளாட்சி மன்றத் தலைவர்களின் பரிந்துரைகள் ஆகியவற்றைப் பெற்று இப்பரிந்துரைகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு ஆய்வு செய்து, ஊரக உள்ளாட்சிகளுக்கும், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்த பரிந்துரைகள் அடங்கிய இரண்டு அறிக்கைகளை இறுதி செய்துள்ளது.

இந்த இரண்டு அறிக்கைகளுக்கும் உயர்நிலைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று அவற்றை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று (10.12.2007) அளித்தார்.

இந்நிகழ்வின்போது நெல்லை மாநகர மேயர் திரு. ஏ.எல். சுப்பிரமணியன்(திமுக), திருச்சி மாநகர மேயர் திருமதி சாருபாலா தொண்டைமான் (காங்கிரஸ்), நகராட்சி மன்றத் தலைவர்களான ஆலந்தூர் திரு. ஆர்.எஸ்.பாரதி, (திமுக) நாகர்கோவில் திரு. வி. அசோகன் சாலமன் (காங்கிரஸ்), பவானி திரு. எம்.ஆர். துரை(அஇஅதிமுக) அம்பத்தூர் திரு. கே.என். சேகர்(பாமக), திருவொற்றியூர் திரு. ஆர். ஜெயராமன்(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), பெரியசேமூர் திரு. டி. பிரபாகரன்(இந்திய கம்யூனிஸ்ட்),

பேரூராட்சித் தலைவர்களான மைலாடி திரு. எஸ். சாயிராம் (திமுக), திருவண்ணாமலை சேத்துப்பட்டு திரு. நீலகண்டன்(காங்கிரஸ்), சின்னவேடம்பட்டி திரு. வி.ராமமூர்த்தி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), கண்ணம்பாளையம் திரு. பி. மௌனசாமி(இந்திய கம்யூனிஸ்ட்), உண்ணாமலைக்கடை திரு. ஆர். ஜெயசீலன்(பாஜக),

மாவட்ட ஊராட்சித் தலைவர்களான நாமக்கல் திரு. காந்தி செல்வன்(திமுக), இராமநாதபுரம் திரு. எ. ரவிச்சந்திர ராமவன்னி (காங்கிரஸ்),

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களான திருவிடைமருதூர் திரு. எஸ். இராமலிங்கம் (திமுக), கமுதி திரு. பி.கே. கிருஷ்ணன் (காங்கிரஸ்), ஆண்டிப்பட்டி திருமதி ஆர்.டி.மலர்விழி(அஇஅதிமுக), நங்கவல்லி திரு. எஸ்.பி.இராமர்(பாமக), தலைஞாயிறு திரு. வி. அமிர்தலிங்கம் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), மானாமதுரை திரு. கே. தங்கமணி (இந்திய கம்யூனிஸ்ட்),

கிராம ஊராட்சித் தலைவர்களான தாயில்பட்டி, திரு. எஸ். சந்தானம், விண்ணமங்கலம் திரு. சத்தியமூர்த்தி, தஞ்சை நீலகிரி திரு. கே. பரசுராமன், செட்டிப்பாளையம் திரு. கே. மாரப்பன், பள்ளிவர்த்தி திரு. ஜே. ஜெயராமன், நாட்டார்மங்கலம் திரு. என். இளங்கோ ஆகியோரும்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைச் செயலர் திரு. க. அசோக் வர்தன் ஷெட்டி, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு. கே. தீனபந்து, உயர்நிலைக்குழு வல்லுநர்களான உள் துறைச் செயலர், திருமதி எஸ். மாலதி, திரு. தமிழருவி மணியன், காந்தி கிராம் பல்கலைக்

**கழகப் பேராசிரியர் திரு. க. பழனித்துரை, ஓய்வு பெற்ற நகராட்சி நிர்வாகத் துறை அதிகாரி திரு. ஜெயராமன் ஆகியோரும் உடனிருந்தனர்.**

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9